# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No.C.C.53/2023 |
| Miscellaneous | : | . |
| Preliminary Register | : | . |
| Deposition of Witness for | : | . |
| Prosecution | : | . |
| Defence | : | சாட்சி.3 |
| Name | : | மாசிலாமணி |
| Father’s Name | : | .ஏழுமலை |
| Village | : | .தேசூர் |
| Taluk | : | . |
| Calling | : | . |
| Religion | : | இந்து |
| Age | : | .66 |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 29.10.2025.

**எதிரிகள் ஆஜர்.**

<u>முதல் விசாரணை</u>

.நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் ஆவேன். எனது பூர்வீக ஊர் பாஞ்சறை கிராமம் ஆகும். மூர்த்தி என்பவர் எனது பங்காளி ஆவார். அவர் மாற்று திறனாளி ஆவார். அவருக்கும் அவரது மனைவிக்கும் குழந்தைகள் ஏதும் இல்லை. மூர்த்தி சிறு வயதில் சென்னையில் இருந்தார் வயதான பிறகு சொந்த கிராமத்திற்கு வந்தார். அவரது தகப்பனார் தனது சொத்தை அவருக்கு ஏதும் ஆவணம் எழுதி வைக்கவில்லை. அவரது பங்காளி சம்பத், சம்பத்தின் அம்மா முனியம்மாளின் பெயருக்கு போலி ஆவணம் மூலமாக மொத்த சொத்தையும் ஏமாற்றி வாங்கிக்கொண்டார்கள். சம்பத் அவரது

மகன்கள் சுரேஷ்குமார், முனியம்மாள் ஆகியோர்கள் பாக பிரிவினை செய்து கொண்டார்கள். அதன்பிறகு மூவரும் சேர்ந்து சென்னையை சேர்ந்த ஒருவருக்கு விற்றுவிட்டார்கள். மேற்படி சொத்தின்மீது 2011ம் வருடம் மூர்த்தி வழக்கு தாக்கல் செய்திருந்தார். 5 ஆண்டுகளாக வழக்கு நீதிமன்றத்தில் நடந்துகொண்டிருந்தது. மேற்படி வழக்கு நிலுவையில் இருந்தபோது மூர்த்தி தனக்கு ஒதுக்கிய 33 செண்ட் நிலத்தில் பயிர் வைக்க செல்வார். மேற்படி கிரையம் பெற்ற சென்னையை சேர்ந்த நபர் சொத்தில் வில்லங்கம் இருந்ததாலும் சென்னையில் இருந்து கிராமத்திற்கு வரமுடியாததாலும் எங்கள் ஊரை சேர்ந்த செல்வம் என்பவர் தனது மகன் தமிழ்செல்வம் பெயருக்கு கிரையம் பேசி 1 ஏக்கர் 40 செண்டிற்கு பதிலாக 1 ஏக்கர் 47 செண்டாக விற்றுவிட்டார். மேற்படி கிரையம் செய்யபோவதை முன்கூட்டியே தெரிந்துகொண்ட நாங்கள் வந்தவாசி சார்பு அலுவலகத்திற்கு வழக்கறிஞா் மூலமாக அறிவிப்பு அனுப்பினோம். மூர்த்தி தனக்கு பாத்திப்பட்ட நிலத்திற்கு செல்ல செல்வம் நிலத்தின் வழியாகதான் செல்லவேண்டும். அதனால் ஏன் நாங்கள் கிரையம் பெற்ற நிலத்தின் வழியாக செல்கிறாய் என்று செல்வமும் அவரது மகனும் கேட்டார்கள்.

22.04.2023ம் தேதி நான்அதிகாலையில் 5.30 மணிக்கு எல்லாம் தேசூரில் இருந்து பாஞ்சறை பன்னை வீட்டிற்கு கிராமத்திற்கு வந்துவிடுவேன். சம்பவ தினத்தன்று எனது அண்ணன் மூர்த்தியின் வீட்டிடம் ஒரே கூச்சலாக இருந்தது அவரது வீட்டிற்கும் எனது பன்னை வீட்டிற்கும் சுமார் 300மீட்டர் இருக்கும். சத்தம் கேட்டு நான் எனது அண்ணன் மூர்த்தி வீட்டிற்கு வந்தபோது ஆஜர் எதிரிகள் எனது அண்ணன் வீட்டிற்குள் புகுந்து ஜல்லி கற்களாலும், துடப்பத்தினாலும் அடித்தார்கள். இருவரும் கை எடுத்து கும்பிட்டும் அவர்கள் கேட்கவில்லை. அதன் பிறகு எதிரிகள் சென்றுவிட்டார்கள். பின்னா் நான் எனது அண்ணனையும், அண்ணியையும் வந்தவாசி அரசு மருத்துவ மனைக்கு அழைத்துச்சென்று சிகிச்சைக்கு சேர்த்தேன். பின்னா் நான் எனது அண்ணனிடம் கையொப்பம் பெற்று தேசூர்காவல் நிலையத்தில் புகார் அளித்தேன்.

அதன் பிறகு ஆன்லைன் மூலமாகவும் புகாா் அளித்தோம். பிறகு மருத்துவமனையில் இருந்து சிகிச்சை முடித்து திரும்பியவுடன் தேசூர் காவல் நிலையத்திற்கு சென்று புகாா் தொடர்பாக கேட்டோம். ஆனாலும் புகார்மீது நடவடிக்கை எடுக்கவில்லை. பின்னர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு புகார் அளித்தோம். அதன் பின்னரும் எதிரிகள்மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.